வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.3865/ அ4/2024 நாள்.23.09.2024

பொருள்: பள்ளிக்கல்வி – நாட்டுநலப்பணித்திட்டம் –வேலூர் மாவட்டம் அரசு/ நகராட்சி மற்றும் நிதியுதவி மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படும் நாட்டுநலப்பணித்திட்ட அலகுகள் – மாணவ/ மாணவியர்களுக்கான சிறப்பு முகாம் நடத்துதல் – சார்பு

பார்வை: சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.062543/எல்/இ1/2024 நாள்.23.09.2024

-----

பார்வையில் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு/ நகரவை/ நிதியுதவி/ மேல்நிலைப் பள்ளிகள் 2024–2025ஆம் ஆண்டில் சிறப்பு முகாமினை எதிர்வரும் விடுமுறை நாட்களில் நடத்திட திட்டமிடுதல் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் சார்ந்தும் பின்வரும் விவரங்களை பின்பற்றுமாறு தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள மேல்நிலைப்பள்ளிகளில் மாணவர்களுக்கு தன்னார்வலர் பணிகளையும், தனித்திறன்களை வளர்த்தல் சார்ந்தும் சமூகத்துடன் வளர்ச்சிக்கான பங்களிப்புகளை அளிப்பதற்கும் நாட்டு நலப்பணித் திட்ட அலகுகள் சிறப்பான செயல்பாடுகளை செயல்படுத்தி வருகிறது. வேலூர் மாவட்டத்தில் உள்ள 27 அலகுகளில் 2024 – 2025 கல்வியாண்டின் சிறப்பு முகாமினை எதிர்வரும் விடுமுறை நாட்களில் நடத்திட திட்டமிடுதல் மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகள் சார்ந்தும் பின்வரும் விவரங்களை பின்பற்றுமாறும் தெரிவிக்கப்படுகின்றது.

## <u>சிறப்பு முகாமில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்.</u>

1. இவ்வாண்டு சிறப்பு முகாமிற்கான தலைப்பு "டிஜிட்டல் கல்வி அறிவி (Youth for Digital literacy)"

2. சிறப்பு முகாம் ஏழு நாட்களுக்கு நடத்தப்பட வேண்டும்.

3. இம்முகாமில் ஒரு அலகு சார்ந்து 25 மாணவர்கள் 2 ஆசிரியர்கள் மற்றும் முகாம் நடைபெறும் இடத்தை சார்ந்த முன்னாள் மாணவர்கள் சிறந்த இளைஞர்கள் உள்ளிட்ட மூன்று நபர்களும் ஆக 30 பேர் தவறாமல் கலந்து கொள்ள தக்க வகையில் திட்டமிடல் வேண்டும். முன்னால் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் தெரிவு செய்யப்படும் பொழுது பள்ளி மேலாண்மை குழு மற்றும் கிராம உள்ளாட்சி உறுப்பினர்கள் அல்லது பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் பரிந்துரையின் அடிப்படையிலே பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் திட்ட அலுவலர் தெரிவு செய்திடல் வேண்டும்.

4. முகாமில் பங்கேற்கும் மாணவர்களின் பெற்றோர்களிடமிருந்து மறுப்பின்மைச் சான்றிதழ் (No Objection Certificate) பெற்ற பின்னரே சிறப்பு முகாமில் பங்கேற்க செய்ய வேண்டும்.

5. முகாம் நடத்துவதற்கான தெரிவு செய்யப்படும் கிராமம் அல்லது இடம் 10 கிலோமீட்டர் துரத்திற்குள் இருக்க வேண்டும் அந்தந்த அமைவின் தத்தெடுக்கப்படும் கிராமத்தில் மட்டுமே சிறப்பு முகாம் நடத்தப்பட வேண்டும், தெரிவு செய்யப்படும் கிராமம் மற்றும் இடத்தினை முன்கூட்டியே பள்ளித் தலைமையாசிரியர் முதன்மை கல்வி அலுவலருக்கு தெரிவிக்க வேண்டும். விவரங்களை இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் – Proforma –ன்படி கருத்துரு முதன்மைக் கல்வி அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

6. முகாம் அழைப்பிதழில் இடம்பெறும் பெயர்கள் மற்றும் விவரங்கள் முழுவதும் தமிழில் தான் இருத்தல் வேண்டும்.

7. மாணவர்கள் தங்கும் இடங்களில் முழுமையாக பாதுகாப்பான முறையில் உள்ளது என்பதை உறுதி செய்தல் வேண்டும். மாணவர்கள் தங்குமிடம். சமையல் இடம், கழிப்பிடம் மற்றும் குடிநீர் குறித்த வசதிகள் உள்ளிட்டவைகளை அவசியம் கருத்தில் கொள்ள வேண்டும்.

8. மாணவர்கள் தங்குமிடம் திறந்தநிலைகிணறு, நீர்நிலைகள், குளம், ஏரி போன்றவற்றிற்கு அருகில் இல்லாதவாறு தெரிவு செய்ய வேண்டும்.

9. முறையான அனுமதியின்றி மாணவர்களை முகாமிலிருந்து வெளியில் செல்ல அனுமதிக்கக்கூடாது.

10. மாணவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில், பாதுகாப்பிற்கு அச்சுறுத்தக்கூடிய எந்த பணியிலும் மாணவர்களை ஈடுபடுத்தக்கூடாது.

11. மாணவர்கள் முகாமில் தங்கும் இடம் மிக பாதுகாப்பு மிகுந்ததாக இருக்க வேண்டும்.

12.சுகாதாரமான தரமான உணவுகள் திட்ட அலுவலர்கள் மேற்பார்வையில் வழங்க வேண்டும். உணவு மாதிரியை சமையலர் தனியே 1 நாள் வரை எடுத்து வைத்தல் வேண்டும்.

13. மூட நம்பிக்கை சார்ந்த மற்றும் மதம் சார்ந்த பரப்புரைகளை மேற்கொள்ள எவரையும் அனுமதி அளிக்க கூடாது.

14.மருத்துவர்களை எளிதில் அனுகும் வண்ணம் இருக்க வேண்டும்.

15.பல அலகுகள் இணைந்து (MEGA CAMP) நடத்தும் பொழுது காவல்துறை மற்றும் தீயணைப்பு துறையிடம் அனுமதி பெற வேண்டும்.

16.நீர் நிலைகள் உள்ள பகுதிகளில் மாணவர்களை அழைத்துச் செல்லக் கூடாது.

17.பனைவிதை நடுதல் போன்ற பணிகளை சமூக பங்களிப்புடன் மேற்கொள்ள வேண்டும்.

18.சாலை பாதுகாப்பு மற்றும் மரம் வளர்த்தலின் நன்மைகள் போன்ற தலைப்புகளில் கருத்தரங்குகள் நடத்த வேண்டும்.

19.கைப்பேசி மற்றும் தேவையற்ற வலைதளங்களை முறையற்ற வகையில் பயன்படுத்தினால் ஏற்படக்கூடிய உளவியல் சார்ந்த பிரச்சினைகளை

மாணவர்களிடம் புரியும்படி CYBER CRIME துறை சார்ந்த வல்லுநர்கள் மூலமாக எடுத்துரைக்க வேண்டும்.

## சிறப்பு முகாமில் பின்பற்ற வேண்டிய செயல்பாடுகள்

1. உடல் நலம் சார்ந்த சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மருத்துவத் துறையிடம் இணைத்து திட்டமிட்டு நடத்துதல் வேண்டும்.

2. மரக்கன்றுகள் மற்றும் விதைகள் நடுதல் (குறைந்தது 1000).

3. சுற்றுப்புற தூய்மை செயல்பாடுகள்"

4. திடக்கழிவு மேலாண்மை (Solid Waste Management and composting).

6. மண் பாதுகாப்பு (Soll conservation),

6. மழை நீர் சேகரிப்பு (Rain water harvesting)

7. தூய்மையான குடிநீர்.

8. சரிவிகித உணவு.

9. எய்ட்ஸ் விழிப்புணர்வு.

10. உயர் கல்வி வழிகாட்டு நிகழ்வு,

11. பெண்களின் விழிப்புணர்வு சார்ந்த நிகழ்வுகள்.

12 அரசு மருத்துவமனை பார்வை.

13. அங்கீகரிக்கப்பட்ட முதியோர் இல்லம் மற்றும் மாணவர் இல்லம் பார்வை.

14. சிறு சேமிப்பு மற்றும் சேமிப்பின் முக்கியத்துவம் அவசியத்தினை எடுத்துரைத்தல்.

15.வங்கி கடன் பெறுதல் வழிகாட்டி நிகழ்ச்சி.

16.பள்ளி செல்லாக் குழந்தைகள் கண்கெடுப்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்வு.

17. போதைப் பொருள் தடுப்பு சார்ந்த விழிப்புணர்வு.

18. சட்டக் கல்வி விழிப்புணர்வு.

19. நுகர்வோர் விழிப்புணர்வு.

20.ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் சார்ந்த மஞ்சள்பை விழிப்புணர்வு.

## திட்ட அலுவலரின் பொறுப்புகள்

1. பிற துறை அலுவலர்களை அணுகி முகாம் சார்ந்த வசதிகளையும் நிகழ்வுகளையும் ஒருங்கிணைக்க தேவையான திட்டமிடல்களையும். செயல்பாடுகளையும் சிறப்பாக செயல்படுத்திட வேண்டும்.

2. முகாம் சார்ந்து தெரிவு செய்யப்படும் கிராமம் மற்றும் இடத்திற்கு முன்னதாக சென்று பார்வையிட்டு உரிய வசதிகளை உறுதிசெய்திடல் வேண்டும். கிராம பெரியோர்கள், தன்னார்வலர்கள், சுய உதவிகுழு உறுப்பினர்கள் கிராம அளவிளான உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்களுக்கும் காவல்துறைக்கும் முகாம் நடைபெறும் இடம் சார்ந்து தகவல் அளித்தல் வேண்டும்.

3. எதிர்பாரா நிகழ்வுகளை எதிர்கொள்வதற்கான தகவல் தொடர்பு உள்ளிட்ட விவரங்களை இறுதி செய்து தயார் நிலையில் வைத்தல் வேண்டும்.

4. மாணவர்களுக்கான போதிய குளியலறை மற்றும் கழிப்பிட வசதிகளை உறுதி செய்தல் வெண்டும்.

5. மாணவியருக்கு இரு பெண் ஆசிரியர்கள் முகாமில் உடனிருத்தல் வேண்டும். மாணவியருக்கு தேவையான வசதிகள் பாதுகாப்பாக உள்ளதை உறுதி செய்தல் வேண்டும்.

6. திட்ட அலுவலர் மாணவர்களை சிறு குழுக்களாக பிரித்து செயல்பாடுகளை ஒதுக்கீடு செய்து பயிற்சி அளிக்க வேண்டும்.

7. திட்ட அலுவலர் முகாம் நடைபெறும் இடங்களில் உள்ள கிராமத்தினர் பங்கேற்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

8. கலை நிகழ்ச்சிகளில் சமத்துவ கருத்திற்கும் அரசியலமைப்பு சட்டத்தினை உறுதிபடுத்தும் வகையில் இருத்தல் வேண்டும். நடன நிகழ்வுகளை அனுமதிக்க கூடாது. பட்டிமன்றம், கருத்தரங்கம், உள்ளிட்ட குழு நிகழ்வாகவும் (poster presentation) படம் வரைந்து விளக்க கருத்து அளித்தல்வேண்டும்.

9. புகைப்படங்கள் அல்லது வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வெளியிட வேண்டுமென்றால் முதன்மைக் கல்வி அலுவலரின் தலைமையிலான குழுவில் அனுமதி பெறவேண்டும்.

<u>**முகாம் நடத்திடுவதற்கான செலவினம்.**</u>

முகம் நடத்துவதற்குரிய செலவினத் தொகை ரூ.17,500/-யினை பள்ளியில் உள்ள பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து முன் பணமாக தற்காலிமாக பெற்றுக் கொள்ளவும். பள்ளிக் கல்வி இயக்ககத்தில் மாநில நாட்டு நலப்பணித் திட்ட அலுவலரிடமிருந்து உரிய தொகை பெற்றதும் உரிய தொகை பள்ளி வங்கி கணக்கிற்கு (PFMS) மூலம் விடுவிக்ககப்படும்.

மேலும் சிறப்பு முகாமில் மாணவர்களின் உரிய பாதுகாப்பினை உறுதி படுத்திக்கொள்ள சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஆணைகள், செயல்முறைகள். ஆகியவற்றை தவறாமல் பின்பற்ற அறிவுறுத்தப்படுகிறது.

மேற்கண்ட விவரங்களைப் பின்பற்றி சிறப்பு முகாமினை எவ்வித புகாருக்கும் சர்ச்சைக்கும் இன்றி நடத்திட பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் சார்ந்த திட்ட அலுவலர், மாவட்ட தொடர்பு அலுவலர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

திட்ட அலுவலருக்கான கூட்டம் வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலகத்தில் இன்று 24.09.2024 மாலை 5.00மணிக்கு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முன்னிலையில் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:

1. உறுதிமொழி படிவம்.
2. Proforma படிவம்

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.9